1990 ஏப்ரல் 16]

மறைமலை நகரில் திருவள்ளுவர் வண்டிகள் நிறுத்தம்

*7212 திரு. ப. சுந்தரம் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மறைமலை நகரில் வேண்டுகோள்படியே நிறுத்தப் படும் திருவள்ளுவர் வண்டிகள் நிரந்தரமாக நின்று பயணிகளை ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும்?

(இ) அவ்வண்டிகள் புதிதாக அமைந்துவரும் இரயில் நிலையத்திற்கு முன்னர் நிறுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக விரைவு பேருந்துகள் அனைத்தும் வேண்டுகோளுக்கிணங்க மறைமலை நகரில் நிறுத்தப்பட்டு பயணிகளை ஏற்றியும் இறக்கியும் செல்கின்றன.

(இ) மறைமலை நகரில் உருவாகி இருக்கும் இரயில் நிலையத்திற்கு எதிரே தேசிய நெடுஞ்சாலையில் தற்போதுள்ள பேருந்து நிறுத்துமிடம் அமைந்துள்ளது.

கோவில்களில் தமிழில் வழிபாடு.

*1859 திரு. மு. இராமநாதன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டுத் திருக்கோவில்களில், தமிழில் வழிபாடு நடத்தப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது என்பது உண்மையா?

(ஆ) தமிழில்தான் வழிபாடு நடத்தப்பட வேண்டும் என்று அரசு உத்திரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) தமிழ்நாட்டுக் கோவில்களில் தமிழில் மட்டுமே வழிபாடு நடத்துவது தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் டெல்லி உச்சநீதிமன்றம் தடையாணை விதித்துள்ளதால், தமிழில் தான் வழிபாடு நடத்த வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க இயலாது.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல் முறையாக தமிழ்நாட்டில் கோவை மாவட்டத்தில் இருக்கக்கூடிய திருப்பேரூரில்தான் காங்கிரஸ் ஆட்சியின் போது தமிழிலே அர்ச்சனை, வழிபாடு நடத்தப்படுகின்ற முறை கொண்டுவரப்பட்டது. ஆனால், 1971-லே திட்டவட்டமாக தமிழ்நாட்டில் இருக்கிற திருக்கோயில்களில் எல்லாம் தமிழில் தான் வழிபாடு நடத்த வேண்டுமென்ற உத்தரவு பிறப்பிக்கப் பட்டது. அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர், திருஞானசம்பந்தர், தாயுமானவர் உட்பட சமயக் குரவர்கள் இறைவனை தமிழில் பாடி தங்கள் வழிபாட்டை நடத்தியிருக்கிறார்கள். இடைக் காலத்தில்தான் சமஸ்கிருத வழிபாடு புகுத்தப்பட்டிருக்கிறது. எனவே, தமிழ்நாட்டில் தமிழில் மட்டுமே அர்ச்சனை நடைபெறும், அது மொழி விருப்பத்தின் பேரில் நடைபெறும் என்ற அளவில் உத்தரவை மீண்டும் அரசு பிறப்பிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கோவிலுக்குச் செல்கிறேன். தமிழிலே அர்ச்சனைகள் செய்கின்றபோது கேட்பதற்கு இனிமையாகத்தான் இருக்கிறது, புரிகிறது. ஆனால், இங்கே உள்ள பிரச்சினை, நீதிமன்றம் பிறப்பித்த தடையாணை இருக்கின்றது. ஆகவே, தமிழில்தான் அர்ச்சனை நடத்த வேண்டும், வழிபாடு நடத்தவேண்டுமென்ற ஆணை பிறப்பிக்க இயலாது. ஆனால், தமிழிலும் அர்ச்சனை வழிபாடு நடத்தவேண்டுமென்ற ஆணை பிறப்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9—35 மணி

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமலைநாயக்க மன்னன் ஆண்டபோது திவானாக இருந்த ராமப்பய்யர் என்பவர் திருவாவினன்குடி என்கின்ற தென் பழனிக்கு வருகை தந்தபோது போகர் வழி வந்த பழைய பண்டார பூஜையை மாற்றி அமைத்து, ஒரு புதிய ஆகம முறையைப் புகுத்தினார் என்று வரலாற்றிலிருந்து அறிகிறோம். ஆகவே, நவ பாஷாண முருகனுக்கு பழைய பண்டார பூசனையயும், தமிழ் வழிபாடு முறையும் அங்கிருந்து தான் தருவிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கோர்ட்டில் தடை ஆணை இருக்கிறது என்று சொன்னார்கள். அரசின் சார்பில் அப்படிப்பட்ட தடை ஆணைகள் எதுவாக இருந்தாலும் அவற்றை நீக்கி தமிழ்நாட்டில் தமிழிலே

1990 ஏப்ரல் 16]

தமிழ் முறைப்படி, பழைய முறைப்படி வழிபாடு நடத்துகின்ற முயற்சிக்கு அரசு மிக விரைந்து நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைக்கற்கள் உண்டு என்றாலும் தடந்தோள் உண்டு என சிரிப்போம்.

திரு. மு. க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறநிலையத் துறை சார்பிலே நடத்தப்படுகின்ற நிகழ்ச்சிகளில் கடவுள் வாழ்த்துப் பாடுவதை மாற்றி அரசு அங்கீகரித்துள்ள தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலைப் பாடுகின்ற திட்டம் அரசுக்கு ஏதேனும் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை அறநிலையத் துறை சார்பில் நடத்தப்படுகின்ற வழிபாடுகளில் அந்தந்த கோவில்களில் பாடப்படுகின்ற பாடல்தான் இறை வணக்கமாகப் பாடப்படுகின்றது. மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடவேண்டும் என்று இருந்தால், இங்கே தெரிவிக்கப் பட்டால், அறநிலையத் துறை அரசு துறை என்பதை நாம் மனதில் கொண்டு அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழில் வழிபாடு நன்றாக புரிவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழில் மட்டும் அல்ல. புரியக்கூடிய மொழியில் வழிபாடு நடத்தினால் மக்களும் புரிந்துகொள்ள முடியும். புரிந்துகொள்ள முடியாத மொழியில்—அந்த மொழி அநேகமாக ''டெட் லாங்குவேஜ்'' என்று சொல்கிறார்கள்—அது அவர்களுக்கே சரியான முறையில் புரிந்துதான் அந்த வழிபாடு நடத்துகிறார்களா என்பதிலே சந்தேகம் இருக்கிறது. எனவே, தடை உத்தரவு இருந்தாலும்கூட கடவுள் பெயரில் நம்பிக்கை உள்ளவர்கள் போய் வழிபாடு செய்யும் போது அவர்கள் அறிந்த மொழியில் அந்த வழிபாடு நடத்துவது சரியாக இருக்கும். எனவே, அரசு அதை வற்புறுத்தி மீண்டும் கொண்டுவருவதற்கு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆணை முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆட்சியில் இருந்தபோது போடப்பட்டது 1974ஆம் ஆண்டு. அதற்குப் பிறகு வழக்கு மன்றத்தில் தடை உத்தரவு வாங்கப்பட்டது. தடை உத்தரவு தமிழில் மட்டும் தான் இருக்க வேண்டும் என்பதற்குத்தான். ஆனால், தமிழிலேயும் அர்ச்சனை செய்வதற்கு தடை உத்தரவு இல்லை. அனேகக்

[1990 ஏப்ரல் 16

கோவில்களில் தமிழில் அர்ச்சனை, வழிபாடு நடத்தப்படுகிறது. ஆகவே, இந்த முறையை மேலும் விரிவுபடுத்த அறநிலையத் துறை ஆவன செய்யும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவை சபாநாயகர் அவர்களே, நீதிமன்றத் தடை ஆணை இருக்கின்ற காரணத்தாலே வழிபாடு நடத்துகிறபோது தமிழிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று முன்பு அறிவிப்புப் பலகைகளைப் போட்டு இருந்தார்கள். இனி அதை தமிழில் அர்ச்சனை செய்யப்படும், விரும்புகிறவர்களுக்கு வட மொழியிலும் அர்ச்சனை செய்யப்படும் என்று போடலாம் என்பதோடு, அர்ச்சனை என்பது தமிழ் பாட்டே என்றும் ‘என்னை நன்றாக இறைவன் படைத்தனன், தன்னை நன்றாக தவம் செய்யுமாறே’ என்று நமது பழைய அடியார்கள் கூறியதாலும் இனிமேல் தமிழில் வழிபாடு நடத்தப்படும், விரும்புகிறவர்களுக்கு வட மொழியிலும் செய்யப்படும் என்று சொல்லுகின்ற அறிவிப்பை வெளியிடுவதிலே நீதிமன்றத் தடை ஆணை குறுக்கிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாகக் குறுக்கிடாது. நீதிமன்ற ஆணை, இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னது போல், அந்த கருத்துருவுக்கு நிச்சயமாக தடையாக இருக்க முடியாது. ஏற்கெனவே அறநிலையத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள், ஆணையர்கள், துணை ஆணையர்கள் இவர்களோடு ஒரு ஆலோசனைக் கூட்டத்தில் இதுபற்றி நாங்கள் ஆலோசனை செய்யும்போது இப்படிப்பட்ட ஒரு அறிவிப்பை அனைத்துக் கோவில்களுக்கும் தெரிவிக்கவேண்டும் என்று நாங்கள் முடிவு செய்து இருக்கிறோம்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோவில்களில் தமிழில் வழிபாடு பற்றி அரசு உத்தரவிடும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். பிராமணர்கள் அல்லாதவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு கோவில்களில் வழிபாடு நடத்துவதற்கு அரசிடத்தில் ஏதேனும் உத்தேசம் உண்டா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனேக கோவில்களிலே பிராமணர்கள் அல்லாதவர்கள் இன்றைக்கு அர்ச்சகர்களாக இருப்பதை நாம் பார்க்கிறோம். ஆகவே, தமிழில் சில கோவில்களில்—பழனி—கோவிலிலே பார்க்கிறோம், அங்கே இருக்கக்கூடிய அர்ச்சகர், பிராமணர் வகுப்பைச் சேர்ந்த அவர் கூட, நல்ல தமிழிலே அர்ச்சனை செய்கிறார். ஆகவே, பிராமணர்களுக்கும், பிராமணர்கள் அல்லாதவர்களுக்கும் தமிழில் அவசியம் பயிற்சி அளிக்கப்படும்.

1990 ஏப்ரல் 16]

9-40 மணி

திரு. சா. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையத் துறை மாநில அரசுக்குக் கட்டுப்பட்டதா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மாநில அரசின் கட்டுப்பாட்டின் கீழேதான் இந்து சமய அறநிலையத் துறை இயங்கிக் கொண்டிருக்கிறது.

பழனி கோவில் விரிவாக்கம்

*3531 திரு. பி. காளியப்பன் :

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1975-ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட ரூ. 40 இலட்சம் செலவிலான பழனி கோவில் விரிவாக்கத் திட்டம் செயல் படுத்தப்பட்டதா?

(ஆ) இல்லையெனில், அது செயல்படுத்தப்படுமா?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவரவர்களே,

(அ) 1975ஆம் ஆண்டு பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலின் விரிவாக்கத் திட்டத்திற்கு ரூ. 41,70 இலட்சம் செலவில் 9 திட்டங்கள் வகுக்கப்பட்டன. இத்திட்டங் களில், மேல்மட்ட நீர்த் தேக்கத் தொட்டி ரூ. 1.20 இலட்சத் திலும், வடக்கு, தெற்கு வெளிப்பிரகாரம் விரிவாக்கத் திட்டம் ரூ. 5 இலட்சம் செலவிலும் கட்டி முடிக்கப்பட்டன. மற்ற 7 திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டிய அவசியமில்லை என்று கைவிடப்பட்டன.

(ஆ) கைவிடப்பட்ட திட்டங்களை மீண்டும் ஆய்வு செய்து, 7 நிலை ராஜகோபுரம் உட்பட அவசியம் என்று கருதப்படுபவை களை அறநிலையத் துறை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கும்.

திரு. பி. காளியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தய தி.மு.க. ஆட்சியில் பழனிமேல் மலை மீது விரிவாக்கத் திட்டம் ஏற்படுத்த திட்டமிடப்பட்டது. அதில் ஒரு பகுதியும் இப்போது விரிவாக்கம் செய்யப்பட்டு பணி முடிக்கப் பட்டிருக்கிறது. பாக்கி உள்ள வேலையையும் செய்து முடிக்கப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, மதிப்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கூறியதைப் போல, விரிவாக்கப்பட்டிருப்பது என்பது ஏற்கெனவே செய்த ஒன்று.